**செய்தி வெளியீடு எண்:768** **நாள்: 12.11.2017**

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே.பழனிசாமி அவர்கள் இன்று (12.11.2017) திருநெல்வேலியில் நடைபெற்ற பாரத ரத்னா புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். நூற்றாண்டு விழாவில் ஆற்றிய உரை**

**திரும்பும் திசையெல்லாம்**
**தெய்வமாய் காட்சிதரும் கருணைத்தாய் !**
**மனித சக்தி கடந்த மகா சக்தி !**
**தாய்த் திருநாட்டின் மணிமகுடம் !**
**துணிவின் சிகரம்!**
**அறிவின் பேரொளி!**
**பொன்மனச் செல்வி**
இதய தெய்வம் **மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா** அவர்களை வணங்கி.

மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் நூற்றாண்டு விழாவில்
தலைமையுரை ஆற்றிய
மாண்புமிகு துணை முதலமைச்சர்
திரு.**ஓ. பன்னீர்செல்வம்** அவர்களே!

சிறப்புரை ஆற்றிய
மாண்புமிகு மக்களவை துணைத்தலைவர்
டாக்டர் **மு. தம்பிதுரை** அவர்களே!

மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும்
பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்
**திருமதி. வி.எம்.ராஜலெட்சுமி** அவர்களே!

வரவேற்புரையாற்றிய
தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை
அரசுச் செயலாளர் திரு. **இரா.வெங்கடேசன்** அவர்களே!

நாடாளுமன்ற உறுப்பினர்கள்
திரு. **எஸ்.முத்துக்கருப்பன்** அவர்களே!
திரு. **கே.ஆர்.பி.பிரபாகரன்** அவர்களே!

தென்காசி நாடாளுமன்ற உறுப்பினர்
திருமதி. **வசந்தி முருகேசன்** அவர்களே!

அம்பாசமுத்திரம் சட்டமன்ற உறுப்பினர்
திரு. **ஆர். முருகையா பாண்டியன்** அவர்களே!
தென்காசி சட்டமன்ற உறுப்பினர்
திரு. **எஸ். செல்வமோகன்தாஸ் பாண்டியன்** அவர்களே!

ராதாபுரம் சட்டமன்ற உறுப்பினர்
திரு. **ஐ.எஸ். இன்பதுரை** அவர்களே!
வாசுதேவநல்லூர் சட்டமன்ற உறுப்பினர்
திரு. **அ. மனோகரன்** அவர்களே!

நாங்குநேரி சட்டமன்ற உறுப்பினர்
திரு. **H.வசந்தகுமார்** அவர்களே! (இ.தே.கா)

மாண்புமிகு அமைச்சர் பெருமக்களே,
மாண்புமிகு சட்டப்பேரவைத் துணைத்தலைவர்
திரு.**பொள்ளாச்சி ஜெயராமன்** அவர்களே!

அரசு தலைமைக் கொறடா
திரு. **எஸ்.இராஜேந்திரன்** அவர்களே!
தமிழ்நாடு அரசின் புதுடெல்லி சிறப்பு பிரதிநிதி
திரு. **என். தளவாய் சுந்தரம்** அவர்களே!

தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழக தலைவர் திருமதி
**பா.வளர்மதி** அவர்களே!
தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத் தலைவர்
திரு. **பி.கே.வைரமுத்து** அவர்களே!

நன்றியுரை ஆற்ற உள்ள
திருநெல்வேலி மாவட்ட ஆட்சித்தலைவர்
திரு. **சந்தீப் நந்தூரி** அவர்களே!

வருகை தந்துள்ள நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களே,
முன்னாள் அமைச்சர் பெருமக்களே!

வருகை தந்துள்ள
நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களே,
முன்னாள் அமைச்சர்களே,

தலைமைக் கழக நிர்வாகிகளே,
முன்னாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களே!
கூட்டுறவு அமைப்புகளின் பிரதிநிதிகளே!
முன்னாள் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகளே!

கழகத்தின் விழுதுகளாக இருக்கின்ற
கழகக் கண்மணிகளே! அரசு அலுவலர்களே!
வணக்கத்திற்குரிய பெரியோர்களே! தாய்மார்களே!
இளைஞர்களே! நலத் திட்டப் பயனாளிகளே!

பத்திரிகை மற்றும் ஊடகத் துறை நண்பர்களே!
உங்கள் அனைவருக்கும் முதற்கண்
எனது வணக்கத்தை தெரிவித்துக்கொள்கிறேன்.

**‘தென் பாண்டி நகர்’** என்ற திருப்பெயரைப் பெற்று பாண்டிய நாட்டின்
பழம்பெருமை மிக்க பகுதியாக

விளங்கும் இந்த **திருநெல்வேலி சீமை**
தமிழும், தெய்வீகமும் மணக்கும்
இயற்கை எழில் கொஞ்சும் அறிவு மாவட்டமாகும்.

தனது பக்தன் காயப்போட்டிருந்த
**நெல்மணிகள் மழையில் நனைந்து போகாதபடி**
**சிவபெருமான் வேலி அமைத்து பாதுகாத்தார்** என்பதால் இவ்வூருக்கு
**திரு–நெல்–வேலி** என்ற பெயர் வந்ததாகக் கூறுகிறார்கள்.

**பொருநை நதிக் கரையில், உணவுக்கு நெல்லும், பொதிகை மலைச் சாரலில்,**
**தமிழுக்கு இலக்கியமும் விளையும் புனித பூமி இது.**

இறையனார் அகப்பொருள்,
திருவிளையாடற் புராணம்,
மதுரைக் காஞ்சி,

குற்றாலக் குறவஞ்சி
போன்ற சங்க இலக்கியங்களும்,
**ராபர்ட் கால்டுவெல்** என்ற
ஆங்கிலேய கிறிஸ்துவ பாதிரியாரின்
**"திருநெல்வேலிச் சீமை வரலாறு"** என்ற
ஆராய்ச்சி நூலும்,
**ரோமாபுரி நாணயங்களும்** திருநெல்வேலியின் பழமையை பறைசாற்றுகின்றன.
நடராஜ பெருமான் திருநடனம் புரியும்
பஞ்ச சபைகளில் இரண்டு சபைகள், திருநெல்வேலியில் உள்ளன.

இந்தியாவில் உள்ள பெரிய கோயில்களில் ஒன்றான
**நெல்லையப்பர் திருக்கோயில் தாமிர சபை** என்றும்,
**திருக்குற்றாலம்–சித்திர சபை** என்றும் அழைக்கப்படுகின்றன.

இதைத் தவிர, **சங்கர நாராயணர்** கோயில்,
தென்காசி **காசி விசுவநாதர் கோயில்**,
குறுக்குத் துறை **முருகன் கோயில்**,
பாபநாசம் **அகத்தியர் கோயில்**,
**திருப்புடைமருதூர் கோயில்**,

**கப்பல் மாதா தேவாலயம்**,
**ஆத்தங்கரை பள்ளிவாசல்** போன்ற
பல ஆன்மிக திருத்தலங்களையும் தன்னகத்தே கொண்டது திருநெல்வேலி மாவட்டமாகும்.

தமிழ் நாட்டு சிற்பக் கலையின் நுணுக்கத்திற்கு
நெல்லையப்பர் திருக்கோயில் இசைத் தூண்களும்,
கிருஷ்ணாபுரம் கோயில் சிற்பங்களும்
சான்றுகளாக விளங்குகின்றன.
**திருநெல்வேலியிலுள்ள இரண்டடுக்குப் பாலம் இந்தியாவிலேயே முதன் முதலாகக் கட்டப்பட்ட இரண்டடுக்கு பாலமாகும்.**
ஆதித் தமிழுக்கும், வீசும் தென்றலுக்கும் பிறப்பிடம் **பொதிகை மலையாகும்.**

தமிழ் முனிவர் **அகத்தியர்**,
தொல்காப்பியத்திற்கு உரை எழுதிய **சேனாவரையர்**,
**மாங்குடி மருதனார், திரிகூட ராசப்பக் கவிராயர்,**

பழந்தமிழ் புலவர் **நப்பசலையார்**,
திருக்குறளுக்கு உரை எழுதிய **பரிமேலழகர்**,
தமிழ் அறிஞர் டாக்டர். **ரா.பி.சேது பிள்ளை**,

முதன் முதல் எம்.எல். பட்டம் பெற்ற
தமிழறிஞர் **கா. சுப்பிரமணியம் பிள்ளை**,
மொழி ஞாயிறு **தேவ நேயப் பாவாணர்**,
**ரசிகமணி டி.கே.சி,**
தமிழ்தாய் வாழ்த்துப் பாடல் எழுதிய
**மனோன்மணியம் சுந்தரனார்,**
திராவிட மகாமுனிவர் **மாதவ சிவஞான முனிவர்**, திருக்குறளை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்த
**ஜி.யு. போப், ரேனியஸ் அய்யர்** போன்ற
இன்னும் பல தமிழ் அறிஞர்கள் இம்மண்ணிலிருந்து
தமிழ் வளர்த்தார்கள்.
சுதந்திரப் போராட்ட வீரர்கள் **பூலித் தேவன்,**
**ஒண்டி வீரன், வீர வாஞ்சிநாதன்** ஆகியோர்
பிறந்த **வீரமண்** இது.

சங்கப் புலவர்கள் வகுத்த, **ஐவகை** நிலங்களையும் **ஒருங்கே பெற்ற மாவட்டம்** திருநெல்வேலி மாவட்டமாகும்.

**சுவாமி சிவானந்தர்** அவதரித்ததும்,
பாய் நெசவுக்குப் புகழ் பெற்றதுமான **பத்த–மடையும்,**

**கட்டபொம்மன் – ஜாக்ஸன் துரையுடன்**
வார்த்தைகளால் மோதிக்கொண்டதும்,
சுதந்திரப் போராட்ட வீரர்களை அடைக்கும் சிறைச்சாலையைக் கொண்டதும்,
பார்க்கும் இடமெல்லாம் நிறைந்திருக்கும்
கல்வி நிறுவனங்களைக் கொண்டதுமான
பழமையான **பாளையங்கோட்டையாகும்**,

தேசிய கவி **பாரதியார்** கல்வி பயின்ற
**நெல்லை ம.தி.தா. இந்து மேல் நிலைப் பள்ளியும்,**
பாரதியார் பல காலம் வாழ்ந்த **கடையம் பகுதியும்,**
பேசப் பேச திகட்டாத **நெல்லைத் தமிழும்,**

தின்னத் தின்ன திகட்டாத **திருநெல்வேலி அல்வாவும்**,

தெய்வத் திருவிளக்குகளை
உற்பத்தி செய்யும் **வாகைக்குளமும்**,
திருநெல்வேலி மாவட்டத்திற்கு
மேலும் புகழைச் சேர்க்கின்றன.

நூற்றாண்டு விழா நாயகர் **பாரத ரத்னா**
**புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களுக்கும், தமிழ்நாட்டின்**
**ஒளிவிளக்காகத் தோன்றிய**
**மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும்** மிகவும் பிடித்த மாவட்டம்
இந்த **திருநெல்வேலி மாவட்டமாகும்.**

**அனைத்திந்திய அண்ணா திமுகவின்**
**இருபெரும் தலைவர்களின் கலைவாழ்க்கையிலும்,**
**அரசியல் வாழ்க்கையிலும் தொடர்புடையது**
**இந்த நெல்லை மாவட்டம். அதற்கு எத்தனையோ உதாரணங்களைச்**
**சொல்லலாம்.**

மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள்
அ.இ.அ.தி.மு.க.வை தொடங்கியதிலிருந்து
இந்த நெல்லை மாவட்ட மக்கள்
மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுக்கு பேராதரவு தந்து
உள்ளனர்.

அ.இ.அ.தி.மு.க. சார்பில் மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள்
இங்கே **யாரை சட்டமன்ற வேட்பாளராக நிறுத்தினாலும் வெற்றி பெறுவார்கள்**
என்பதை அ.இ.அ.தி.மு.க. எதிர்கொண்ட
பல சட்டசபை தேர்தல்களில்
நிரூபித்து காட்டியவர்கள் இந்த மாவட்ட மக்கள்.

ஜாதி, மத வேறுபாடுகளைக் கடந்து,
மாண்புமிகு **புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர்**
**அவர்கள் மீது** மக்கள் கொண்ட **அபிமானத்தை**
**தங்கள் வாக்குகள் மூலமாக**

**நிரூபித்துக்  காட்டியவர்கள் இந்த திருநெல்வேலி மாவட்ட மக்கள்** என்பதை யாராலும் மறுக்க முடியாது.

அதற்கு உதாரணமாக திரு. **ஜி.ஆர்.எட்மண்ட்,**
**திரு. நாவலர் நெடுஞ்செழியன்,**
**திரு. நாஞ்சில் மனோகரன் மற்றும்**
**திரு. ஒய்.எஸ்.எம்.யூசுப்** ஆகியோரைக் கூறலாம்.

இவர்கள் பிற மாவட்டங்களிலிருந்து
**இந்த நெல்லை மாவட்டத்தில் போட்டியிட்டு,**
மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களின் மக்கள் செல்வாக்கால்
**வெற்றி பெற்றவர்கள்.**

**இந்த வெற்றிகள்** அன்று பலரை **வியக்க வைத்தது.** இந்த அபரிமிதமான வெற்றிக்கெல்லாம் நெல்லை சீமையைச் சேர்ந்த **மக்களாகிய நீங்களும்,** மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் உங்கள்  மீது வைத்திருந்த **நம்பிக்கையும் தான் காரணம்.**

**நல்லவர்களுக்கு ஆதரவு அளிக்கும்**
**வல்லமை வாய்ந்தவர்கள் நீங்கள் என்பதால் தான்,**
**மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசியல் வாழ்க்கை**
**உதயமாவதற்கு இந்த திருநெல்வேலி மாவட்டம் கீழ் திசையாக**
**அமைந்திருந்தது.**

**1968–ஆம் ஆண்டு** இதே திருநெல்வேலி **பாளையங்கோட்டையில்** மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் தலைமையில்
மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்
ஒரு **மாபெரும் நடன நிகழ்ச்சியை** நடத்தினார்கள்.
**திருநெல்வேலி நகரமே ஸ்தம்பிக்கும்** அளவிற்கு  மக்கள் பெருந்திரளாக கூடியிருந்தார்கள்.

நடன நிகழ்ச்சியின் நிறைவில்
**மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள்**
**மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களை** வாழ்த்தி பேசும் போது,

**மாண்புமிகு அம்மா அவர்களின் பெயரை குறிப்பிட்டு, அம்மா அவர்கள், அற்புதமான நடனக் கலைஞர், அழகாகப் பாடவும் கூடியவர் என்பதை 'அடிமைப்பெண்' படம் நிரூபித்தது –**
**நடிப்பில், நடனத்தில் மட்டுமல்லாமல் எல்லா துறைகளைப் பற்றியும், எல்லாமும் அறிந்தவர்** என்று
மாண்புமிகு அம்மா அவர்களின் பெயரை சொல்லி குறிப்பிட்டார் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள்.

**சமூகப் பணியில் ஈடுபட்டு நாட்டுக்காகவும், நாட்டு மக்களுக்காவும் பாடுபடத் தொடங்கினால் நாடே வியக்கும் அளவிற்கு தன்னிகரற்ற தலைவியாக அவர்கள் திகழ்வார்கள் "** என்று பாராட்டி பேசினார் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள்.

இந்தப் பாராட்டே மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின்
**எண்ணத்தில் விழுந்த**
பொது வாழ்க்கைக்கான **முதல் படியாகும்.**

மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் **வாக்கு பலித்தது** என்பது உலகமே அறிந்த உண்மை.

பாளையங்கோட்டையில் இந்த சம்பவம் நடந்த போதே, மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களின் ஞானக் கண்களுக்கு மட்டும், ஒரு மாபெரும் தலைவி வளர்ந்து கொண்டிருப்பது தெரிந்திருக்கிறது.
அதை உறுதிப்படுத்துவது போல்
**"ராமன் தேடிய சீதை"** என்ற படத்தில்,
**"திருவளர்ச் செல்வியோ நான் தேடிய தலைவியோ"** என்று பாடியிருப்பார்கள்.

அப்போது அந்தப் படத்தையும் பாடலையும் மக்கள் திரைப்படமாகத்தான் ரசித்திருப்பார்கள்.

ஆனால், மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் அவற்றை தகவல்களாக இந்த தமிழ் உலகுக்கு கூறியிருக்கிறார்கள் என நினைக்கத் தோன்றுகிறது. மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் **தீர்க்க தரிசனமும்,** மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் **எதிர்காலமும் அந்தப் பாடலில் இருந்தது** என்பதை நாம் பின்னாளில்தான் தெரிந்து கொண்டோம்.

பாளையங்கோட்டை சம்பவத்திற்குப் பிறகு
1972ஆம் ஆண்டு **கர்நாடகாவில்** நடந்த
**‘அன்னமிட்டகை’** படப்பிடிப்பிற்கு குறிப்பிட்ட நேரத்தில் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் வரவில்லை. நேரம் தவறாமையில் கண்டிப்பாக உள்ள புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வராதது அனைவருக்கும் அச்சத்தை ஏற்படுத்தியது.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் படப்பிடிப்பிற்கு வரும் வழியில், ஒரு விபத்தைப் பார்த்து,

அதில் சிக்கிய ஒரு பாட்டியையும், அவரது பேரனையும் மருத்துவமனையில் சேர்த்துவிட்டு வந்ததால்தான் படப்பிடிப்பிற்கு வர தாமதமானது என்ற செய்தி மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் உட்பட பலருக்கும் கடைசியில்தான் தெரிந்தது.

முகம் தெரியாத ஒரு பெண்மணிக்கு உதவிய மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களை புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் பாராட்டி,

**“கலைச்செல்வியின் துணிவையும், அறிவாற்றலையும், மனிதாபிமானத்தையும், உணர்வையும் கண்டு அசந்துபோய் நிற்கிறேன். அவர் எதிர்காலத்தில் நாட்டுக்கும், நாட்டு மக்களுக்கும் நல்ல முறையில் பணிபுரிவார்”** என்று பாராட்டினார்கள்.

**“நதியைப் போல நாமும் நடந்து**
**பயன்தர வேண்டும்**

**கடலைப் போலே விரிந்த இதயம்**
**இருந்திட வேண்டும்**

**வானம் போலே பிறருக்காக**
**அழுதிட வேண்டும்**

**வாழும் வாழ்க்கை – உலகில் என்றும்**
**விளங்கிட வேண்டும்”** என்ற

மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களின் படப்பாடலைப்போல மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இரக்க குணமுடையவராக திகழ்ந்தார்கள்.

ஒரு திரைப்படம் என்பதும் திரைப்பாடல் என்பதும் பொழுதுபோக்கு அம்சமாக மட்டுமே இல்லாமல், அதற்கும் மேலே, விழிப்புணர்வை மக்கள் உள்ளத்தில் விதைக்க வேண்டும். என்ற கொள்கையைக் கொண்டவர் மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள்.

**“படம் பார்த்து விட்டு ரசிகர்கள் தியேட்டரை விட்டு செல்லும் போது, புதிய பாடம் கற்க வேண்டும்”** என்றார்கள் மாண்புமிகு பேரறிஞர் அண்ணா அவர்கள்.

அதைத்தான் மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் பின்பற்றினார்கள். அதனால்தான், மக்கள் மனதோடு மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் மனமும் இணைந்திருந்தது.

ஒரு நடிகருக்கும், பொதுமக்களுக்குமான இடைவெளியை முற்றிலுமாக குறைத்துக் காட்டியவர் மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள்.

இதே பாணியைத்தான் மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள்அரசியலிலும் பின்பற்றினார்கள். அதனால்தான் மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் தமிழ்நாட்டின் முதலமைச்சராகி சிறப்பான முறையில் மக்களுக்கு கடமையாற்ற முடிந்தது.

மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர்.
அவர்கள் ஒருமுறை

**‘நான் நினைத்திருந்தால் கோடிக் கணக்கில் பணம் சேர்த்திருக்கலாம், பணத்தை சேர்க்கவில்லை. ஆனால், கோடிக்கணக்கான இதயங்களை சேர்த்துக் கொண்டிருக்கிறேன்’** என்று
உருக்கமாக பேசினார்கள்.

**இன்றைக்கும் கோடிக்கணக்கான இதயங்கள் மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களை வாழ்த்திக் கொண்டிருப்பதை உலகம் முழுவதும் பார்க்க முடிகிறது.**

காலத்தால் எத்தனையோ நடிகர்களும்,
தலைவர்களும் மக்களால் மறக்கப்பட்டும், மறுக்கப்பட்டும் இருக்கும்போது
மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் **மறைந்து**
**30 ஆண்டு காலம் ஆகியும்** மக்களோடு மக்களாக மக்கள் மனதில் வாழ்ந்து கொண்டிருக்கும்,
மக்கள் உதடுகள் உச்சரித்துக் கொண்டிருக்கும்
ஒரே தலைவர் மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள்தான்.
அதனால்தான் அவரை '**மக்கள் திலகம்**' என்று
நாம் போற்றுகின்றோம்.

மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுக்கு **எத்தனையோ பட்டங்களும் விருதுகளும் கிடைத்திருக்கலாம்.**
அத்தனையிலும் சிறந்ததாக,
வெகுஜன மக்களின் இதயங்களில்
ஒட்டிக் கொண்டதுமான ஒரு பட்டம்தான்..
'**வாத்தியார்**' பட்டம் என்பதாகும்.

அடித்தட்டு மக்கள், தொழிலாளர்கள்,
விவசாயிகள், இளைஞர்கள், மகளிர் என அனைவராலும் அன்புடன்
அழைக்கப்பட்டதும், அறியப்பட்டதுமான இந்த
'**வாத்தியார்**' பட்டத்தை

**மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுக்கு 1960**ஆம் ஆண்டு வழங்கியது
**இதே திருநெல்வேலி மாவட்ட**
**நகராட்சி மன்றம்தான் என்பதை பெருமையோடு சொல்லிக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.**

அதனால்தான் 1969–ஆம் ஆண்டு
தனது 105வது படமான '**நம்நாடு**'
என்ற படத்தில் மாண்புமிகு
புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நடிக்க,

**“வாங்கய்யா வாத்தியாரய்யா,**
**வரவேற்க வந்தோமைய்யா,**
**ஏழைகள் – உங்களை நம்பி**
**எதிர்பார்த்து நின்றோமய்யா,**

**அண்ணன், தம்பி, உண்மையின் தோழன்,**
**ஏழைக்குத் தலைவன் நீங்களய்யா,**

**சமயம் வந்தது, தருமம் வென்றது,**
**நல்லதை நினைச்சோம் – நடந்ததைய்யா”**
என்று ஒரு அருமையான பாடலை
இடம் பெற வைத்தார்கள்.

மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களை தமிழ்நாட்டிற்கு
தலைமையேற்க
மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களும், பொதுமக்களும் அழைப்பு
விடுப்பது போலவே
இந்தப் பாடல் அமைந்தது.

‘**வாத்தியார்**’என்று நீங்கள் வைத்த பட்டத்தைக் கொண்டே மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களை வரவேற்றதால் அந்தப் பெருமையும் உங்கள் மாவட்டத்திற்கு தான் சாரும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

**ஆக, திருநெல்வேலி மண்ணில்தான்**
**1968–ஆம் ஆண்டு, மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களை பொதுவாழ்க்கைக்கு அழைப்பு விடுத்தார்கள்.**

**1969–ஆம் ஆண்டு மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் நீங்கள் வழங்கிய ‘வாத்தியார்’ பட்டத்தைக் கொண்டு மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களை தமிழ்நாட்டை ஆள அழைப்பு விடுத்தார்கள் – மக்கள்.**

வரலாற்றில் பதிவாகி உள்ள இந்த இரண்டு சம்பவங்களிலும் திருநெல்வேலி மக்களாகிய உங்களுக்கு பங்கு இருக்கிறது என்பதை பெருமையோடு சொல்லிக் கொள்கிறேன்.

**எனவேதான்.. என்னைப் போன்றவர்கள்
இந்த மண்ணில் கால் வைப்பதையே
புனிதமாக கருதுகின்றோம்.**

மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களும் ஏற்படுத்தியிருக்கிற பாதையில்தான் இப்போதும் அனைந்திந்திய அண்ணா தி.மு.க. பயணித்துக் கொண்டிருக்கிறது. அவர்களுடைய கொள்கைகளில் இருந்து சிறிதும் பிறழாமல்.. அவர்கள் விருப்பத்தையே வாக்குறுதியாக ஏற்று நாங்கள் பல்வேறு கடமைகளை ஆற்றி வருகின்றோம்.

**எங்களை, நாங்கள் தலைவர்களாக
ஒரு காலமும் நினைத்துக் கொண்டதில்லை.
தொண்டர்களாகவே நினைத்துத்தான்
அல்லும் பகலும் மக்கள் பணியாற்றி வருகிறோம்.**

மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர்.
அவர்கள் தனது இறுதி காலம் வரை
இந்த கழகத்திற்காக உழைத்தவர்.
உடல் நலம் குன்றி அமெரிக்காவில்
சிகிச்சை பெற்று வந்த போதுகூட
கட்சியின் வளர்ச்சிக்கான
சிந்தனையில்தான் மூழ்கியிருந்தார்கள்.

சிகிச்சை முடித்து அமெரிக்காவிலிருந்து
இந்தியா திரும்பும் போது மாண்புமிகு
புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் கழகத்தினரிடையே பேசிய ஒரு வார்த்தை இப்போதும் என் நெஞ்சில் நிழலாடுகிறது.

**‘நான் அமெரிக்காவிலிருந்து லாபத்தோடுதான் திரும்பி வந்திருக்கிறேன். அதாவது, அங்கு பலரை அண்ணா தி.மு.க.வுக்கு உறுப்பினர்களாக சேர்த்து விட்டு வந்திருக்கிறேன்’** என்று பெருமையோடு சுட்டிக்காட்டினார்கள்.

மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர்.
அவர்கள் **தனது இறுதிக் காலத்திலும்,**

அ. இ.அ. தி.மு.க.வுக்கு உறுப்பினர்களை
சேர்த்து ஆட்சியையும், கட்சியையும்
பலப்படுத்தினார் என்பதை
தொண்டர்கள் உணர வேண்டும்.

நாம் அனைவரும் எப்பொதும்
அனைத்து நேரங்களிலும் உற்சாகமான
நிலையில் இருப்போம் என்று கூறமுடியாது.
அத்தகைய நேரங்களில் புரட்சித்தலைவர்
பொன்மனச் செம்மல் எம்.ஜி.ஆர். அவர்களின்
பாடல்களை கேட்டாலே போதும் –

நம்மையும் அறியாமல் அப்பாடல்களின் இசையும், பொருளும் நமது இரத்த நாளங்களில் புகுந்து
ஒரு புத்துணர்ச்சியை நமக்கு அளிக்கும் பாருங்கள்
அதை உணர்ந்தவர்களுக்குத்தான் புரியும்.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா
அவர்களின் சூளுரையான..

**‘அனைத்திந்திய அண்ணா தி.மு.க.**
**இன்னும் நூறாண்டுகள் வாழும்’**
என்பதை நடத்திக் காட்ட வேண்டிய கடமை
நம் அனைவருக்கும் இருக்கிறது. அதற்காக நாம் கடுமையாக உழைக்க வேண்டி இருக்கிறது.

மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர்.
அவர்களும், மாண்புமிகு புரட்சித் தலைவி
அம்மா அவர்களும் மக்களுக்கு வழங்கிய திட்டங்களால் ஏற்பட்ட
பயன்களைப் பற்றி விளக்கமாக மக்களிடம் எடுத்துக் கூறுவோம்.

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மாஅவர்களின் வழியில் நடக்கும் இந்த அரசு பொறுப்பேற்றதிலிருந்து இன்று வரை தொடங்கிய திட்டங்களை மக்களுக்குக் கொண்டு செல்வதில் அரசு அலுவலர்களுக்கு உற்ற தோழர்களாக இருந்து உதவி செய்யும்.

**இப்போது நடந்து கொண்டிருக்கின்ற மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் அரசு.**

பொது சுகாதாரத்திற்கும், கல்வி மேம்பாட்டிற்கும், மகளிருக்கும், விவசாயத்திற்கும்,
இளைஞர்களுக்கும், தொழில் வளர்ச்சிக்கும்
அதிக முக்கியத்துவம் அளிக்கிறது.

இயற்கை இடர்பாடுகளிலிருந்து
மக்களைக் காக்க போர்க்கால அடிப்படையில்
விரைந்து செயல்படுகிறது. முன்னெச்சரிக்கை நடவடிக்கையெல்லாம் எடுத்த காரணத்தால்தான்
வரலாறு காணாத வறட்சியின் போது
தமிழகத்தில் குடிநீர் பஞ்சம் ஏற்படாமல் காத்தும்,

தற்போது தமிழ்நாட்டில் தொடர்ந்து பெய்யும்
வடகிழக்குப் பருவ மழையிலிருந்து
மக்களின் அன்றாட வாழ்க்கை பாதிக்காமல்
உடனடி நிவாரண நடவடிக்கைகளை
மேற்கொண்டும் மக்களை பாதுகாக்க முடிகிறது.

அனைத்துத் துறைகளும் முடுக்கி விடப்பட்டு,
மாண்புமிகு அமைச்சர் பெருமக்களின்
தலைமையில் ஒவ்வொரு பகுதிக்கும்
ஒவ்வொரு குழுவாகப் சென்று
நிவாரணப் பணிகள் துரிதமாக நடைபெற்று
வருவதை மக்கள் அறிவார்கள்.

குறை கூறுபவர்கள் – குறை கூறிக் கொண்டுதான் இருப்பார்கள். நல்லது எது செய்தாலும் அதிலும் ஒரு குற்றம் கண்டுபிடித்து
குறை சொல்வதை திமுக அதிகமாகவே செய்து வருகிறது. பாவம், இதன் மூலமாகத்தான் தங்கள் இருப்பை அவர்கள் காட்டிக் கொள்கிறார்கள்.

**“நெஞ்சம் உண்டு, நேர்மை உண்டு, ஓடு ராஜா
நேரம் வரும் காத்திருந்து பாரு ராஜா”**
என்ற மாண்புமிகு புரட்சித்தலைவர்

எம்.ஜி.ஆர். அவர்களின் பாடலையே
கட்டளையாக ஏற்று செயல்படுவோம்.

**“யார் கட்சி பெரிது என்று**
**கணக்குப் போட்டு,**
**அதற்காக போராடாமல்,**
**யாருடைய உழைப்பு –**
**இந்த நாட்டின் நலத்திற்கு**
**பயன்படுகிறது என்பதில் போட்டியிடுவோம்”–**
என்றார் மாண்புமிகு புரட்சித் தலைவர்
எம்.ஜி.ஆர் அவர்கள்.

**அதுதான் நமது இருபெரும் தலைவர்களும் நமக்கு சொல்லிச் சென்ற பாடம். அதையே நாம் பின்பற்றி நடப்போம்.**

எதிர்கட்சிகளால் ஏற்படும் தடைகளையெல்லாம் தகர்த்து எறிந்து விட்டு, எப்போதும்
நாட்டுக்கு நலம் பயக்கும் திட்டங்கள் போடுவதிலும், அதனை விரைந்து செயல்படுத்துவதிலும்தான்
அதிக கவனம் செலுத்தி வருகிறோம்.

பாரத ரத்னா, புரட்சித்தலைவர் மாண்புமிகு
டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் நூற்றாண்டு விழாவின் மூலம் எத்தனை மகத்தான திட்டங்கள்
மக்களுக்காக துவக்கப்பட்டுள்ளன,
எத்தனை புதிய திட்டங்களுக்கு அறிவிப்புகள் வெளிவந்திருக்கின்றன
என்பதைப் பற்றியெல்லாம் மக்கள் அறிவார்கள்.

அதுதான் நமக்கு பலம்.
மக்கள் பலம் இருக்கும் வரை..
எந்த சக்தியாலும் நம்மை
வீழ்த்திவிட முடியாது என்ற உறுதிப்பாட்டோடு,

திருநெல்வேலி சீமைக்கு பல கோடி ரூபாய் மதிப்பிலான நலத்திட்டங்களை
தொடங்கி வைப்பதிலும், அடிக்கல் நாட்டுவதிலும்,
புதிய திட்டங்களை அறிவிப்பதிலும்

பெருமிதம் கொள்கின்றேன்.

68 கோடியே 10 லட்சம் ரூபாய்
மதிப்பீட்டில் முடிக்கப்பட்டுள்ள
கூடங்குளம் அணுமின் நிலையத்தை
சுற்றியுள்ள 100 கிராமங்களுக்கான
கூட்டு குடிநீர் திட்டம் உட்பட118 கோடி
ரூபாய் மதிப்பீட்டிலான 192 பணிகளை
நான் இன்று துவக்கி வைத்துள்ளேன்.

திருநெல்வேலி மாநகராட்சியில்
அம்ருத் திட்டத்தின் கீழ் 289 கோடி
ரூபாய் மதிப்பீட்டில்  பாதாள சாக்கடை அமைப்பு செயல்படுத்துதல் திட்டம்
உட்பட 528 கோடியே
91 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான 142 பணிகளுக்கு
நான் இன்று அடிக்கல் நாட்டியுள்ளேன்.

பல்வேறு துறைகளின் சார்பில்
34 ஆயிரத்து 655 பயனாளிகளுக்கு
87 கோடியே 74 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில்
நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட உள்ளன.

இந்த அரசு பொறுப்பேற்றது முதல்
இன்று வரை 11 ஆயிரத்து 112 கோடியே
83 லட்சம் ரூபாய் மதிப்பிலான 35 ஆயிரத்து
157  பணிகளை தொடங்கி வைத்தும்
4 ஆயிரத்து 84 கோடியே 32 லட்சம் ரூபாய்
மதிப்பிலான 6 ஆயிரத்து 852 பணிகளுக்கு
அடிக்கல் நாட்டியும் உள்ளேன்.

ஆக மொத்தம் 15 ஆயிரத்து 196 கோடியே
15 லட்சம் ரூபாய் மதிப்பிலான  42 ஆயிரத்து
9 பணிகள் நடைபெற்று வருகின்றன.

அம்மாவின் அரசு மக்களின் நன்மைக்காக

பல்வேறு திட்டங்களை கடந்த ஆறு ஆண்டுகளில் இந்த மாவட்டத்தில் செயல்படுத்தியுள்ளது.
அவற்றில் ஒரு சிலவற்றை பற்றி மட்டும் இங்கே குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன்.

ஏனென்றால், எதிர்கட்சிகள் தொடர்ந்து, இந்த அரசு நாட்டு மக்களுக்கு என்ன திட்டங்களை செய்தது என்பதை தினந்தோறும் சுட்டிக்காட்டி கொண்டிருக்கிறார்கள்.

நாங்கள் ஒவ்வொரு மாவட்டத்திற்கு செல்லும் போதும், அந்த மாவட்டத்தில் அம்மாவுடைய அரசு அந்த மாவட்ட மக்களுக்கு என்ன திட்டங்களை கொடுத்தது என்ன நன்மை கொடுத்தது என்பதை பட்டியலிட்டு நாங்கள் விவரமாக சொல்லிக் கொண்டிருக்கின்றோம். அதன் அடிப்படையில் திருநெல்வேலி மாவட்டத்திலும் மாண்புமிகு அம்மாவின் அரசு என்ன திட்டங்கள் இந்த மக்களுக்கு வழங்கியிருக்கிறது, மக்கள் எவ்வளவு நன்மை பெற்றிருக்கிறார்கள் என்ற விவரத்தை இந்த நேரத்திலே சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

சிறு குறு விவசாயிகள் கூட்டுறவு வங்கிகளுக்கு செலுத்த வேண்டிய நிலுவையிலுள்ள கடன்
160 கோடியே 95 லட்சம் ரூபாய் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம் 19 ஆயிரத்து 696 விவசாயிகள் பயன் பெற்றுள்ளனர்.

படித்த ஏழை பெண்களுக்கான திருமண உதவி திட்டத்தின் கீழ் 38 ஆயிரத்து 440 பெண்களுக்கு
132 கோடியே 44 லட்சம் ரூபாய் நிதி உதவியும்
485.80 கிலோ கிராம் தங்கமும் வழங்கப்பட்டுள்ளது.

முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டு திட்டத்தின் கீழ் 149 கோடியே 49 லட்சம் ரூபாய் செலவில் 79 ஆயிரத்து 269 பயனாளிகள் சிசிக்சை பெற்றுள்ளனர்.

உழவர் பாதுகாப்பு திட்டத்தின் கீழ் 233 கோடியே
28 லட்சம் ரூபாய் நிதி உதவி வழங்கப்பட்டுள்ளது.
இதன் மூலம் 10 லட்சத்து 72 ஆயிரத்து
713 விவசாயிகள் பயன் பெற்றுள்ளனர்.

விலையில்லா மடிக்கணினி வழங்கும் திட்டத்தின் கீழ் 220 கோடி ரூபாய் செலவில் மாணாக்கர்களுக்கு
1 லட்சத்து 44 ஆயிரத்து 713 மடிக்கணினிகள் வழங்கப்பட்டுள்ளன.

114 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 1 லட்சத்து
79 ஆயிரத்து 865 மாணாக்கர்களுக்கு
விலையில்லா மிதிவண்டிகள் வழங்கப்பட்டுள்ளன.

48 ஆயிரத்து 932 சுய உதவிக் குழுக்களுக்கு
1,351 கோடியே 49 லட்சம் ரூபாய் வங்கிக்
கடன் வழங்கப்பட்டுள்ளது.

மகசூல் பாதித்த விவசாயிகளுக்கு
இடுபொருள் நிவாரணத் தொகையாக
32 கோடியே 4 லட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு,
42ஆயிரத்து 300 விவசாயிகள்
பயன் அடைந்துள்ளனர்.

**குடிமராமத்து** திட்டத்தின் கீழ்
6 கோடியே 19 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டு,
103 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

**விவசாயிகளுக்கு விலையில்லா வண்டல் மண் வழங்கும் திட்டத்தின்** கீழ் **ஆயிரத்து**
**658** குளங்களிலிருந்து 16 லட்சத்து 93 ஆயிரத்து
566 கன மீட்டர் அளவிற்கு வண்டல் மண் வழங்கப்பட்டுள்ளது. இதன் மூலம்
**9 ஆயிரத்து 53 விவசாயிகள்** பயன் அடைந்துள்ளனர்.
தன்னிறைவு திட்டத்தின் கீழ் பொதுமக்கள் பங்களிப்புடன் 41 கோடியே 93 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 358 பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் சிறப்பு சாலைகள் திட்டத்தின் கீழ் 188 கோடியே 66 லட்சம் ரூபாய் செலவில் 499 சாலைப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

பிரதம மந்திரி குடியிருப்பு திட்டத்தின் கீழ்
298 கோடியே 38 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில்

22 ஆயிரத்து 595 வீடுகள்
கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள 7 நகராட்சிகளிலும் 581 சாலைப் பணிகள்
103 கோடியே 25 லட்சம் ரூபாய்
மதிப்பீட்டில் முடிக்கப்பட்டுள்ளன.

38 கோடியே 90 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 390 குடியிருப்புகளுக்கு குடிநீர்
வழங்கும் திட்டம்
செயல்படுத்தப்பட்டுள்ளது.
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்தின் சார்பில் 36 கோடி
ரூபாய் செலவில் 8 துணை மின்நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

61 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 287 மொகாவாட்
திறன் கொண்ட 13 துணை மின் நிலைய
விரிவாக்கத் திட்டத்திற்கான பணிகள்
துவக்கப்பட்டுள்ளன.

வீரவாஞ்சிநாதன் மற்றும் மாவீரன் ஒண்டிவீரன் ஆகியோருக்கு தமிழக
அரசின் சார்பில் புதிதாக நினைவகங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

இதைத்தவிர, மருத்துவத்துறைக்காக
73 கோடியே 76 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில்
பல்வேறு கட்டட பணிகள் மேற்கொள்ளப்பட்டு உள்ளன.

குடிசை மாற்று வாரியத்தின் சார்பில்
அனைவருக்கும் வீட்டுவசதி திட்டத்தின் கீழ்
304 கோடியே 62 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில்
10 ஆயிரத்து 154 வீடுகள் கட்டப்பட்டு வருகின்றன.

தமிழ்நாடு சாலை மேம்பாட்டு திட்டம்–2ன் கீழ்
நாங்குநேரி–பரதர் உவரிச் சாலை (SH– 89)
கிழக்கு கடற்கரை சாலை கி.மீ.0/0 முதல் 35/200 வரை தரம் உயர்த்தும் பணி
154 கோடியே 45 லட்சம் ரூபாய்
மதிப்பீட்டில் நடைபெற்று வருகிறது.

இராஜபாளையம்–சங்கரன் கோவில் திருநெல்வேலி சாலை
கி.மீ. 1/800 முதல் 28/000 வரை மற்றும்
கி.மீ. 33/800 முதல் 82/800 வரை
தரம் உயர்த்தும் பணிகள் 357 கோடியே
26 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் நடைபெற்று வருகிறது.

திருநெல்வேலி–செங்கோட்டை–கொல்லம்சாலை
(SH - 39) கி.மீ. 5/000 முதல் 50/600 வரை
நான்கு வழிச் சாலையாக அகலப்படுத்தி
உறுதிப்படுத்துதல் பணி 480 கோடியே
60 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் நடைபெற்று வருகிறது.

**இத்தகைய ஆக்கப்பூர்வமான திட்டங்களைப் பற்றி
எப்போதாவது எதிர்கட்சிகள் பேசியிருக்கிறார்களா?**

இவ்வளவு திட்டங்களையும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின்
அரசு மாவட்டத்திற்கு நிறைவேற்றிய பணிகள் என்பதை பெருமையோடு
சொல்லிக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.
இதுதான் திட்டம், இதுதான் மக்களுக்கு நன்மை செய்கின்ற திட்டம்.

**உண்மையிலேயே மக்கள் மீது அக்கறைக் கொண்டவர்களாக இருந்தால்
குறைகூறுவதை நிறுத்திக் கொண்டு களத்தில் இறங்கி
மக்கள் பணி ஆற்றுங்கள்.**

இதைக் கூறுகின்ற போது எனக்கு ஒரு கதை நினைவுக்கு வருகிறது.

**காட்டில் பார்க்கின்ற எல்லா மிருகங்களையும்
குறை கூறுவதையே பிழைப்பாக கொண்ட
ஒட்டகம் ஒன்று வாழ்ந்து வந்தது.**
ஒரு யானையைப் பார்த்து,

**“சிறு பையன்கள் சுவற்றில் கிறுக்கி
வைத்ததைப்போல் உன் கண்கள் உள்ளன.
சாப்பிட்டு, சாப்பிட்டு குண்டாக பெருத்துள்ள
உன் உடலுக்கு ஏற்ற கண்களா உனக்கு இருக்கின்றன?”** என்று யானையை
கிண்டலடித்தது.

ஒரு பசுமாட்டைப் பார்த்து **" மாடே! உன் முகம் செவ்வகமாக இருக்கிறது. இந்த லட்சணத்தில் கொம்புகள் வேறு அவலட்சணமாக இருக்கின்றன"** என்று கேலி பேசியது.

சிங்கத்தைப் பார்த்து **" சிங்கமே! ஒரு ராஜாவுக்கு உரிய அழகு உன்னிடம் இருக்கிறதா?**
**நீ சடாமுடியுடன் முனிவரைப் போல் இருக்கிறாய். இந்த கூத்தில் பெரிய வாய்வேறு ...**
**அதில் கர்ஜனை வேறு,"** என்று
சிங்கத்தைக் குறை கூறியது.

இவ்வாறு காட்டில் உள்ள
**மான், முயல், கழுகு, காகம்,** என்று எதையும்
அந்த ஒட்டகம் விட்டுவைக்கவில்லை.

அதனால் அந்த ஒட்டகத்தைப் பார்த்தால்
எல்லா மிருகங்களும், பறவைகளும் போய்,
ஒளிந்து கொள்ளுகின்றன.

இதை பார்க்கும் ஒட்டகம்
**" இந்த பயந்தாங்கொள்ளி விலங்குகள்**
**தனக்கு பதில் சொல்ல முடியாமல் பயந்து**
**ஒளிந்து கொள்கின்றன"** என்ற **மமதையில்**
காடு முழுவதும் **வீர நடைபோட்டு** நடந்து வந்தது.

ஒரு நாள் ஒரு நரி ஒட்டகத்தைப் பார்த்தது.
ஒட்டகம் குறைசொல்ல ஆரம்பிப்பதற்கு முன்பே
**நரி சுதாரித்துக் கொண்டு ஒட்டகத்தை அருகில் உள்ள நீர்நிலைக்கு அழைத்துச் சென்று**
**நீரில் தெரியும் உருவத்தைப் பார்க்கச் சொன்னது.**

கரையிலிருந்தபடி நீரை எட்டிப் பார்த்த ஒட்டகம்
**" நரியே இப்படிப்பட்ட அருவருப்பான**
**மிருக்கத்தை இது வரை நான் பார்த்ததே இல்லை.**

**நீளமான முகம் , வளைந்த கொம்பு போன்ற கால்கள், கூன் விழுந்த முதுகு, அசிங்கமான கண்களை உடைய இந்த மிருகத்தை எங்கிருந்து கண்டுபிடித்தாய்''** என்று ஒட்டகம் சிரித்தது.

**"நீரில் தெரியும் அந்த அசிங்கமான விலங்கு**
**நீயே தான் – உன்னுடைய**
**உருவம் தான் உயரமே தவிர,**
**உனக்கு அறிவு துளியும் கிடையாது –**
**உன் முதுகின் லட்சணமே உனக்குத் தெரியாமல், அடுத்தவன் முதுகைப் பற்றி இனிமேல் நீ போசாதே''** என்றது நரி.
**ஒட்டகம் தன் தவறை உணர்ந்து தலை குணிந்தது.**

இப்படித்தான் பலர் **தன் குறைகளை மறைப்பதற்கு**
**மற்றவர்களை எப்போது பார்த்தாலும்**
**குற்றம் சொல்லிக் கொண்டே இருப்பார்கள்.**
**தாங்கள் ஆட்சி செய்த காலத்தில்**
**அவர்கள் ஆற்றிய பணி என்ன,**
**நாட்டு மக்களுக்கு பொது நலத்தோடு**
**செய்த நல்லவை என்ன,**
**சுயநலத்தோடு தாங்கள் செய்து கொண்டது என்ன என்பதை நாட்டு மக்கள் நன்கறிவார்கள்.**

இந்த ஒட்டகக் கதையைக் கேட்ட பிறகாவது
அவர்கள் திருந்த வேண்டும்.

பொன்மனச்செம்மல் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆரின் நூற்றாண்டு விழா தேனி மாவட்டத்தில் நடைபெற்றபொழுது, நானும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களும் இரட்டைக்குழல் துப்பாக்கி போல் செயல்படுவோம் என்ற ஒரு கருத்தைச் சொன்னேன். ஆகவே நாங்கள்இணைந்து செயல்படுவோம் என்ற கருத்தை மக்களிடையே எடுத்து வைத்தோம். இதில் என்ன குறைகண்டு பிடித்தார் என்று தெரியவில்லை. அவர் பேட்டி கொடுக்கும்பொழுது, உள்ளக்குமுறலோடு அவர் வெளிப்படுத்திய கருத்து என்னவென்று

ஊடகங்கள், பத்திரிகை வாயிலாக நாம் பார்த்தோம், உங்களுக்கும் தெரியும். எந்தளவிற்கு அவர் விமர்சனம் செய்துள்ளால், எந்தளவிற்கு எங்கள் மீது கோபம் கொண்டுள்ளார் என்பது அவருடைய உள்ளக்குமுறலில் இருந்து நாங்கள் பார்க்க முடிகிறது. ஆகவே, நாம் எச்சரிக்கையோடு இருக்கவேண்டும். ஏனென்று சொன்னால், இந்த இயக்கம் ஒன்றாக இருக்கக்கூடாது, இந்த இயக்கத்தை உடைக்க வேண்டும், இந்த ஆட்சியைக் கவிழ்க்க வேண்டுமென்று பலரின் துணையோடு அவர் கனவு கண்டு கொண்டிருக்கின்றார். அவர் கனவு கானல்நீராகத்தான் இருக்கும் என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்டுகின்றேன். எவ்வளவு இன்னல்கள், துன்பங்கள் இருந்தாலும் நாங்கள் இணைந்து செயல்பட்டு பொன்மனச் செம்மல் புரட்சித்தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்கள் நூற்றாண்டு விழாவிலே நாம் சபதம் ஏற்போம். இருபெரும் தலைவர்களுடைய லட்சியத்தை நிறைவேற்றுவதே நம்முடைய இலட்சியம், இலட்சியம், இலட்சியம் என்பதை இந்த நேரத்திலே குறிப்பிட விரும்புகின்றேன்.

அதேபோல, புயல், வெள்ளம், வறட்சி எது வந்தாலும் சரி, மக்கள் பாதிக்கப்பட்டால், பொன்மனச் செம்மல் புரட்சித்தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்கள் ஆட்சிக் காலத்திலும் சரி, , இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் ஆட்சிக்காலத்திலும் சரி, மக்களுக்கு ஓடோடிப் போய் உதவி செய்கின்ற ஆட்சி அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி என்பதை மக்கள் உணருவார்கள். ஆகவே, இந்த இயக்கம் மக்களுக்காக தோற்றுவிக்கப்பட்ட இயக்கம். மக்களுக்கு சேவை செய்கின்ற இயக்கம். இவர்களைப்போன்று, ஒரு குடும்பத்திற்காக ஆட்சி செய்கின்ற ஆட்சி இந்த ஆட்சி அல்ல. நாட்டு மக்களுக்கு நன்மை செய்கின்ற ஆட்சி இந்த ஆட்சி. அதற்காக பொன்மனச் செம்மல் புரட்சித்தலைவர் டாக்டர்

எம்.ஜி.ஆர் அவர்களால் உருவாக்கப்பட்ட அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைக் கட்டிக்காக்க மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள், இந்த இருபெரும் தலைவர்கள் வகுத்த பாதையில் நாங்கள் சென்று கொண்டிருக்கின்றோம் என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதேபோல, இருபெரும் தலைவர்கள் எப்படி கடைக்கோடியில் இருக்கின்ற மக்களுக்கும் திட்டப்பணிகளை எடுத்துச் சென்றார்களோ அதேபோல மாண்புமிகு அம்மாவினுடைய அரசும், கடைக்கோடியில் இருக்கின்ற மக்களுக்கு திட்டப்பணிகளை எடுத்துச் செல்வதில் இரவு பகல் பாராமல் உழைத்து முதன்மையாக விளங்கிக் கொண்டிருக்கின்ற அரசு என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

இன்றைக்கு தமிழகத்தில் சட்டம், ஒழுங்கு சிறப்பாக நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது. இந்தியாவில் எந்த மாநிலத்திலும் இல்லாத அளவிற்கு அமைதிப் பூங்காவாக விளங்குகின்ற நாடு தமிழ்நாடு என்பதை இந்த நேரத்திலே பெருமையோடு சொல்லிக்கொள்ள கடமைப்பட்டிருக்கின்றேன். மாண்புமிகு அம்மாவினுடைய அரசிற்கு மக்களுடைய பேராதரவு இருக்கின்றது அதன் காரணமாக, தமிழ்நாடு அமைதிப் பூங்காவாக விளங்கிக் கொண்டிருக்கின்றது.

விவாசாயய பெருங்குடி மக்கள் பயன்பெற வேண்டுமென்பதற்காக நீண்ட நாட்களாக விவசாயிகள் அரசுக்கு விடுத்த கோரிக்கையை நிறைவேற்றும்விதமாக குடிமராமத்து என்னும் அற்புதமான திட்டத்தை அம்மாவினுடைய அரசு துவக்கி, முதற்கட்டமாக ரூபாய் 100 கோடி ஒதுக்கீடு செய்து, 1519 ஏரிகளில் பணிகள் துவங்கப்பட்டு இன்றைக்கு நிறைவடைந்திருக்கின்றன. அடுத்தகட்டமாக ரூபாய் 300 கோடி ஒதுக்கீடு

குடிமராமத்துப் பணிகளுக்காக ஒதுக்கப்படவுள்ளது. அதன்மூலம், பல்லாயிரக்கணக்கான ஏரிகள் தூர்வாரப்படும். அதுமட்டுமல்லாமல், சமூக ஆர்வலர்கள், நாட்டின் மீது அக்கறை கொண்டவர்கள் எல்லாம் குடிமராமத்து திட்டத்தில் பங்குபெற்று அவர்களும் சொந்த செலவிலே ஏரி, குளங்களில் வண்டல் மண்ணை அள்ளுவதற்கு உதவி செய்தார்கள். விவசாயப் பெருங்குடிமக்களும், விவசாய பிரதிநிதிகளும் ஆங்காங்கே ஏரி, குளங்களில் இருக்கின்ற வண்டல் மண்ணை இலவசமாக எடுத்து, தங்கள் நிலங்களுக்கு எருவாக இட்டார்கள். ஆகவே, இந்தத் திட்டம் ஒரு மிகப்பெரிய, பிரம்மாண்டமான திட்டம். விவசாயப் பெருங்குடி மக்களின் வாழ்வாதாரத்திற்கு அடித்தளமாக விளங்குகின்ற திட்டம். இத்திட்டம் மூலமாக, பருவமழை பொழிகின்றபொழுது கிட்டத்தட்ட 30 சதவீதம் நீர் தேங்கக்கூடிய சூழ்நிலையை உருவாக்கித்தந்த அரசு அம்மாவினுடைய அரசு என்பதை இந்த நேரத்தில் பெருமையோடு சொல்லிக்கொள்ள கடமைப்பட்டிருக்கின்றேன். ஒரு மனிதனுக்கு உயிர் எவ்வளவு முக்கியமோ அந்தளவிற்கு விவசாயிகளுக்கு உயிராக இருப்பது நீர். அந்த நீரை செறிவூட்டுவதற்காக கிட்டத்தட்ட ரூபாய் 1000 கோடி அம்மாவினுடைய அரசால் நிதிஒதுக்கீடு செய்யப்பட்டு மூன்றாண்டுகளில் தடுப்பணை கட்டும் பணி துவங்கப்படும். முதற்கட்டமாக இந்த ஆண்டு ரூபாய் 350 கோடி தடுப்பணை கட்டுவதற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்த நிதியின் மூலமாக ஓடைகள், ஆங்காங்கே இருக்கின்ற நதிகளின் குறுக்கே தடுப்பணைகள் கட்டப்பட்டு பருவமழையில் பொழிகின்ற நீரை தேக்கி வைத்து, நிலத்தடி நீரை உயரச் செய்வதற்கு அம்மாவினுடைய அரசு திட்டங்கள் தீட்டி, செயல்படுத்திக் கொண்டிருக்கின்றது.

அதேபோல, கல்வியிலே அம்மாவினுடைய அரசு புரட்சி கண்டுள்ளது. கடந்த ஆறாண்டுகளில் எந்தவொரு மாநிலத்திலும் இல்லாத அளவிற்கு அதிகமாா கல்லூரிகளை தொடங்கிய ஒரே மாநிலம் தமிழ்நாடு தான் என்பதை தெரிவித்துக் கொள்கின்றேன். மாண்புமிகு இதயதெய்வம் அம்மாவினுடைய பொற்கால ஆட்சியில்தான் கிட்டத்தட்ட அரசு 65 கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளை தமிழ்நாட்டிற்குத் தந்தார்கள். ஏழை, எளிய மாணவர்கள் தங்கள் பகுதியிலேயே குறைந்த கட்டணத்தில் உயர்கல்வி கற்கக்கூடிய சூழ்நிலையை புரட்சித்தலைவி அம்மா அவர்கள் உருவாக்கித் தந்திருக்கின்றார்கள். அம்மாவினுடைய அரசும் இந்த ஆண்டு 11 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளை கொடுத்திருக்கின்றது. ஆக, அம்மாவினுடைய அரசு, கடந்த ஆறாண்டுகளில் 76 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளை கொடுத்து கல்வித்தரத்தை உயர்த்தியிருக்கின்றது. கிட்டத்தட்ட ஆறாண்டுகால ஆட்சியில், 31 லட்சம் பேருக்கு மடிக்கணினிகள் வழங்கியதின் விளைவாக, குக்கிராமத்தில் குடிசைகளில் வாழ்கின்ற மாணவ, மாணவிகள்கூட உலகப் பொது அறிவு பெறக்கூடிய விஞ்ஞானக் கல்வியை கொடுத்த ஒரே அரசு அம்மாவினுடைய அரசு. இன்றைக்கு உயர்கல்வி படிப்பவர்கள் 100—க்கு 44.3 சதவீதமாக உயர்ந்து, இந்தியாவிலேயே உயர்கல்வி படிக்கக் கூடியவர்களுடைய எண்ணிக்கை உயர்ந்த மாநிலம் தமிழ்நாடு என்ற பெருமையை பெற்றுள்ளது.

சுகாதாரத் துறையில், இந்தியாவிலேயே முதன்மை வகிக்கின்ற துறையாக விளங்கிக் கொண்டிருக்கின்றது. கிராமப்புறத்தில் வசிக்கின்ற மக்களுக்கு, அங்கேயே சிகிச்சை அளிக்கக்கூடியவகையில் ஒவ்வொரு ஒன்றியத்திலும், தரம்உயர்த்தப்பட்ட, மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையங்களை அம்மாவினுடைய அரசு வழங்கியிருக்கின்றது. சுகாதாரத்

துறையில், இந்தியாவிலேயே முதன்மையாக விளங்குகின்ற மாநிலம் தமிழ்நாடு.

அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஒன்றரை கோடி தொண்டர்களால் கட்டப்பட்ட எஃகு கோட்டை, மாபெரும் இயக்கம் என்பதை கோடிட்டுக்காட்ட விரும்புகின்றேன். இதிலிருந்து ஒரு கல்லைக்கூட உங்களால் அசைக்க முடியாது என்பதை கூறிக்கொள்ளவிரும்புகின்றேன்.

பிற கட்சிகளில் எல்லாம் தலைவன்தான் உயர்ந்த பதவிக்கு வரமுடியும். ஆனால், ஒரு தொண்டன்கூட தமிழகத்தில் முதலமைச்சராக வரமுடியும் என்றால், அது அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமாகத்தான் இருக்கமுடியும். உழைப்பாலும், விசுவாசத்தாலும் சாதாரண தொண்டன்கூட உயர்ந்த பதவிக்கு வரமுடியும் என்ற நிலைப்பாடுள்ள இயக்கம் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் என்பதை பெருமையோடு சொல்லிக்கொள்ள கடமைப்பட்டிருக்கின்றேன்.

அம்மாவினுடைய அரசு உங்களுடைய அரசு. ஏழை, எளிய மக்களுக்கு உழைக்கக்கூடிய அரசு. எந்தத் துன்பம் வந்தாலும் அதிலிருந்து விடுபடக்கூடிய சூழ்நிலையை உருவாக்குகின்ற அரசு.

பொன்மனச் செம்மல் புரட்சித்தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்களின் நூற்றாண்டு விழாவினை மாநாடு போல் நடத்தியக்காட்டிய இந்த மாவட்டத்தின் அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்வதோடு, அவரோடு இணைந்து பணியாற்றிய நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், கழக நிர்வாககிகளுக்கும் எனது நன்றியை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே.பழனிசாமி அவர்கள் இன்று ( 12.11.2017) திருநெல்வேலியில் நடைபெற்ற பாரத ரத்னா புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். நூற்றாண்டு விழாவில் திருநெல்வேலி மாவட்டத்திற்கான புதிய அறிவிப்புகள்**

1. திருநெல்வேலி மாவட்டம், திசையன்விளையைத் தலைமையிடமாகக் கொண்டு புதிய வருவாய் வட்டம் உருவாக்கப்படும்.

2. "அனைவருக்கும் வீடு" வசதி திட்டத்தின் கீழ் ஏழை எளிய மக்களுக்கு திருநெல்வேலி மாவட்டம், அம்பாசமுத்திரம் நகர், வாகைக்குளம் திட்டப் பகுதியில் 240 அடுக்கு மாடி குடியிருப்புகள் கட்டப்படும்.

3. கீழப்பாவூர் ஒன்றியம், பெத்தநாடார்–பட்டியில் அரசு கால்நடை மருந்தகத்திற்கு புதிய கட்டடம் கட்டப்படும்.

4. ராணி அண்ணா கல்லூரி மாணவிகள் கல்லூரிக்குச் சென்று வர ஏதுவாக, கீழப்பாவூரி–லிருந்து ஆலங்குளம் வழியாக திருநெல்வேலி செல்ல பேருந்து வசதி செய்து கொடுக்கப்படும்.

5. மாண்புமிகு அம்மா அவர்களால் அறிவிக்கப்பட்ட இராமநதி, ஜம்பு நதி மேல்மட்டக் கால்வாய் திட்டத்தின் முதற்கட்டப் பணிகள் நடைபெற்று வருகின்றன. இரண்டாம் கட்டப் பணிகளுக்கு விரைவில் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

6. 4,943 ஏக்கர் விவசாய நிலங்கள் பாசன உறுதி பெறும் பொருட்டு, கடையம் ஒன்றியம், இராம நதி அணை தூர்வாரப்படும்.

7. **நம்பியாற்றின் குறுக்கே கண்ண–நல்லூர் பகுதியில் ஒரு தடுப்பணை** கட்டப்படும்.

8. திருநெல்வேலி மாவட்டம், அம்பாசமுத்திரம் வட்டம், **கல்லிடைக்–குறிச்சி கிராமத்தில் எலுமிச்சை ஆற்றின் குறுக்கே படுகை அணை** கட்டப்படும்.

9. திருநெல்வேலி மாவட்டம், வீரகேரளம்புதூர் வட்டம், **அகரம் கிராமத்தில் சிற்றாற்றின் குறுக்கே தடுப்பணை** கட்டப்படும்.

10. திருநெல்வேலி மாவட்டம், வீரகேரளம்புதூர் வட்டம், **சுரண்டை கிராமத்தில் அனுமா–நதி சிற்றாற்றில் கலக்கும் இடத்திற்கு மேற்புறம் தடுப்பணை** கட்டப்படும்.

11. திருநெல்வேலி மாவட்டம், வீரகேரளம்புதூர் வட்டம், **சுரண்டை கிராமத்தில் அனுமா–நதியில் அருந்தவ–பிராட்டி அணைக்கட்டிற்கு கீழ்புறம் தடுப்பணை** கட்டப்படும்.

12. திருநெல்வேலி மாவட்டம, கடையநல்லூர் வட்டம், **சிந்தாமணி கிராமத்தில் கோட்டமலை–யாற்றின் அச்சந்திகுளம் பிரியும் இடத்தில் படுகை அணை** கட்டப்படும்.

13. திருநெல்வேலி மாவட்டம், சங்கரன்கோவில் வட்டம், **பனையூர் கிராமத்தில் நிசப–நதியின் குறுக்கே தடுப்பணை** கட்டப்படும்.

14. திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு **அதிநவீன உபகரணங்கள், சி.ஆர்ம் கருவி, தாய்சேய் நலப்பிரிவிற்கு நவீன கருவிகள் மற்றும் மாரடைப்பு சிகிச்சைப் பிரிவு** அமைக்கப்படும்.

15. கண்டிகைப்–பேரி மருத்துவமனையில் **அதிநவீன உபகரணங்கள் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள்** ஏற்படுத்தப்படும்.

16. மாரடைப்பு நோயை ஆரம்ப நிலையிலேயே கண்டறிந்து முதல் உதவி சிகிச்சை அளிக்க ஏதுவாக, அம்பாசமுத்திரம், கோவில்பட்டி, செங்கோட்டை மருத்துவமனைகளில் **மாரடைப்பு சிகிச்சைப் பிரிவுகள்** அமைக்கப்படும்.

17. திருநெல்வேலி மாவட்டத்தில் **புதியதாக ஒரு மருந்து கிடங்கு** கட்டப்படும்.

18. திருநெல்வேலி மாவட்டத்தில் பணியாற்றும் 379 கிராமப்புற சுகாதார செவிலியர்களுக்கு மருத்துவ புள்ளி விவரங்களை பதிவு செய்திட **கையடக்க கணினிகள் (Tablets)** வழங்கப்படும்.

19. மேல–நீலித–நல்லூர் மற்றும் ராதாபுரம் வட்டாரங்களில் **விரிவான ஆரம்ப நல்வாழ்வு சேவைகள்** வழங்கப்படும்.

20. சொக்கம்பட்டி மற்றும் வாசுதேவநல்லூர் ஆரம்ப சுகாதார நிலையங்களில் **உட்கட்டமைப்பு வசதிகள்** ஏற்படுத்தப்படும்.

21. தென்காசி மாவட்ட அரசு தலைமை மருத்துவமனையில் 2 **டயாலிசிஸ், எண்டோஸ்கோப் உள்ளிட்ட அதிநவீன உபகரணங்கள் வழங்கப்படும். புற்றுநோயாளிகளுக்கான வலி நிவாரணம் மற்றும் ஆதரவு சிகிச்சை மையம், கட்டணமில்லா கருத்தரிப்பு மையங்கள் உட்கட்டமைப்பு வசதிகளுடன்** ஏற்படுத்தப்படும். மாரடைப்பு நோயை ஆரம்ப நிலையிலேயே கண்டறிந்து முதல் உதவி சிகிச்சை அளிக்க ஏதுவாக, **மாரடைப்பு சிகிச்சைப் பிரிவு** ஏற்படுத்தப்படும்.

22. சங்கரன்கோவில் அரசு மருத்துவமனையில் **சி.டி.ஸ்கேன், டயாலிசிஸ் உள்ளிட்ட கருவிகள்** மற்றும் **தடுப்பூசி சேமிப்பு கிடங்கு** அமைக்கப்படும். மாரடைப்பு நோயை ஆரம்ப நிலையிலேயே கண்டறிந்து முதல் உதவி சிகிச்சை அளிக்க ஏதுவாக, **மாரடைப்பு சிகிச்சைப் பிரிவு** அமைக்கப்படும்.

23. ரெட்டியார்பட்டி அரசு மருத்துவமனையில் **நவீன கண் பரிசோதனை மற்றும் சிகிச்சை மையம்** அமைக்கப்படும்.

24. கடையநல்லூர் அரசு மருத்துவமனைக்கு **டயாலிசிஸ் கருவி** வழங்கப்படும்.

25. கீழப்பாவூர் ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த **பெத்தநாடார்பட்டி கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம்** அமைக்கப்படும்.

26. பாளையங்கோட்டை ஒன்றியம், **முத்தூர் ஊராட்சி, காமராஜ் நகர் பகுதியில் புதிய துணை சுகாதார நிலையம்** அமைக்கப்படும்.

27. திசையன்விளையில் ஊரக வளர்ச்சித் துறை சார்பில் பன்னோக்கு சமுதாய நலக் கூடம் கட்டப்படும்.

## சாலை மேம்பாட்டுப் பணிகள்

28. தாழையூத்து முதல் டக்கரம்மாள்–புரம் வரை மதுரை – கன்னியாகுமரி சாலையில் கி.மீ.142/0 – 146/2 மற்றும் கி.மீ.156/0 – 160/0 வரை இருவழித்தடத்திலிருந்து நான்கு வழித் தடமாக அகலப்படுத்தி மேம்பாடு செய்யப்படும்.

29. திருநெல்வேலி புறவழிச்சாலை கி.மீ.0/0 – 3/510 மற்றும் கி.மீ.3/920 – 7/6 வரை நான்கு வழிச் சாலையாக மத்திய தடுப்புடன் (குறுக்கு வடிகால் உட்பட) அகலப்படுத்தி மேம்பாடு செய்யப்படும்.

30. இடைகால் – சேர்ந்தமரம் சாலை கி.மீ.0/0–13/8 வரை உள்ள சாலை அகலப்படுத்தி உறுதிப்படுத்தப்படும்.

31. சங்கரன்கோவில் – வாசுதேவநல்லூர் சாலை கி.மீ.0/0 – 18/120 வரை உள்ள சாலை அகலப்படுத்தி உறுதிப்படுத்தப்படும்.

32. ராதாபுரம் – இடையன்குடி சாலை கி.மீ.0/0 – 17/0 வரை ஒரு வழித்தடத்திலிருந்து இடைவழித்தடமாக அகலப்படுத்தி மேம்பாடு செய்யப்படும்.

33. சாம்பவர் வடகரை சாலை கி.மீ.0/0 – 8/6 வரை உள்ள சாலை அகலப்படுத்தி உறுதிப்படுத்தப்படும்.

34. திருநெல்வேலி – செங்கோட்டை – கொல்லம் கி.மீ.5/0 முதல் 50/6 வரை நான்கு வழிச்சாலையாக அகலப்படுத்தி உறுதிப்படுத்தப்படும்.

## ரயில்வே மேம்பாலங்கள்

35. மதுரை – கன்னியாகுமரி சாலை கி.மீ.153/10–இல் கடவு எண் 4–க்கு மாற்றாக ரயில்வே கி.மீ.4/8–9–இல் திருநெல்வேலி செய்–துங்க–நல்லூர் ரயில் நிலையங்களுக்கு இடையே ரயில்வே மேம்பாலம் கட்டப்படும்.

36. நாங்குநேரி – ஏர்வாடி – வள்ளியூர் – விஜயாபதி சாலை கி.மீ.14/6–9–இல் கடவு எண் 82 பி – க்குப் பதிலாக (ரயில்வே கி.மீ.322/9–இல் 323/0)

நாங்குநேரி – வள்ளியூர் ரயில்வே நிலையங்களுக்கு இடையில் ரயில்வே மேம்பாலம் கட்டப்படும்.

37. காவல் கிணறு – ராதாபுரம் சாலை கி.மீ.0/6–இல் ரயில்வே கடவு எண் 74பி–க்குப் பதிலாக ரயில்வே கி.மீ.310/0 – 310/100 – இல் வடக்கு பணங்குடி மற்றும் ஆரல்வாய்மொழி ரயில்வே நிலையங்களுக்கு இடையே ரயில்வே மேம்பாலம் கட்டப்படும்.

**புறவழிச்சாலைகள்**

38. அம்பாசமுத்திரம், தென்காசி மற்றும் சங்கரன்கோவிலில் புறவழிச்சாலைகள் அமைக்கப்படும்.

**உயர்மட்டப் பாலங்கள்**

39. திருநெல்வேலி – மதுரை – கன்னியாகுமரி சாலை கி.மீ.150/2–இல் பழைய ஆற்றுப் பாலத்திற்கு இணையாக தாமிரபரணி ஆற்றின் குறுக்கே உயர்மட்டப் பாலம் கட்டப்படும்.

40. கரம்பை – பொட்டல் சாலை கி.மீ. 3/4 –இல் ஓர் உயர்மட்டப் பாலம் கட்டப்படும்.

41. வாசுதேவநல்லூர் – பூலாங்குளம் சாலை கி.மீ.1/2 – இல் ஓர் உயர்மட்டப்பாலம் கட்டப்படும்.

42. செண்பகபுரம் – மீனாட்சிபுரம் சாலையில் கி.மீ. 1/6–இல் ஓர் உயர்மட்டப்பாலம் கட்டப்படும்.

43. கோதைச்சேரி சாலையில் கி.மீ.1/2–இல் ஓர் உயர்மட்டப்பாலம் கட்டப்படும்.

44. ரெட்டியார்பட்டி – விஜய–நாராயணம் சாலை கி.மீ.9/8–இல் ஓர் உயர்மட்டப்பாலம் கட்டப்படும்.

45. குற்றாலம் – மத்தளம்–பாறை சாலை கி.மீ.0/10–இல் ஓர் உயர்மட்டப்பாலம் கட்டப்படும்.

46. திருநெல்வேலி மாவட்டம், அம்பாசமுத்திரம் தாலுகா, கோவிந்தபேரி கிராமத்தில் உள்ள மனோ கல்லூரியில் முதல் மாடியி கட்டட பராமரிப்புப் பணி மற்றும் சுற்றுச்சுவர் கட்டித்தரப்படும்.

47. திருநெல்வேலி மாவட்டம், ராணி அண்ணா அரசு மகளிர் கலைக் கல்லூரி மற்றும் சுரண்டை காமராசர் அரசு கலைக் கல்லூரி ஆகியவற்றிற்குக் கூடுதல் கட்டடங்கள் கட்டித்தரப்படும்.

இது மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுக்கு எடுக்கின்ற நூற்றாண்டு விழா. இவ்விழாவிற்கு வந்திருக்கின்ற மகளிர், குழந்தைகள் பத்திரமாக வீடுபோய் சேர வேண்டும். தொண்டர்களும் பொது மக்களும் வாகனத்தில் போகிறபோதும், நடந்து போகிற போதும் கவனமாக வீடுபோய் சேரவேண்டும் .

இந்த விழா நடைபெறும் இடம் வழங்கிய பள்ளி நிர்வாகத்திற்கு எனது இதயபூர்வமான நன்றியை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த விழாவை சிறப்பாக ஏற்பாடு செய்த
நல்ல உள்ளங்களுக்கு எனது மனமார்ந்த
பாராட்டுகளை தெரிவித்துக் கொண்டு

இந்த அரசு உங்களின் சேவகனாக தொடர்ந்து பணியாற்றும் என்பதை
தெரிவித்துக் கொண்டு விடைபெறுகிறேன்.
நேற்றும் நமதே !
இன்றும் நமதே !
நாளையும் நமதே !

வாழ்க அண்ணா நாமம்!
வளர்க புரட்சித் தலைவர் புகழ் !
தொடர்க மாண்புமிகு அம்மாவின் ஆட்சி!

நன்றி! வணக்கம்!

**வெளியீடு : – இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை–9**